இந்தியாவில் இருக்கக் கூடிய எல்லா மாநிலங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் –

# பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் பாதுகாப்பான மாநிலம் தமிழ்நாடுதான்!

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஒன்றிய அரசின் தரவுகளைச் சான்று காட்டி – நயினார் நாகேந்திரனுக்கு ஆணித்தரமான விளக்கம்!

சென்னை, பிப்.21-

**சட்டப்பேரவையில் நேற்று முன் தினம் பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் பேச்சின் நடுவே குறுக்கிட்டுப் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "நாட்டிலேயே பெண்களுக்கும், குழந்தை களுக்கும் பாதுகாப்பான மாநிலம் தமிழ்நாடுதான்" என்று ஒன்றிய அரசின் தரவுகளைச் சான்று காட்டி ஆணித்தரமான விளக்க மளித்தார்.**

சட்டப்பேரவையில் இது தொடர்பாக நடைபெற்ற விவாதம் வருமாறு:

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :** பாரதிய ஜனதா கட்சியினுடைய தலைவர், மாண்புமிகு உறுப்பினர் நயினார் நாகேந்திரன் நீட் தேர்வு பற்றிச் சொன்னார். நான் கேட்க விரும்புவது, இப்போது உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது; மத்தியில் நீங்கள்தான் ஆட்சியில் இருக்கிறீர்கள். இப்போதாவது நீட் தேர்வுக்கு விலக்களிக்க முன் வருவீர்களா என்ற கேள்வியைத்தான் நான் கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு நீங்கள் பதில் சொல்லுங்கள்.

மணிப்பூர் கணக்கையும் நீங்கள் சேர்த்து சொன்னால் சரியாக இருக்கும்.

இந்தியாவில் இருக்கக்கூடிய மாநிலங்களையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய நேரத்தில், பெண்களுக்கு உரிய பாதுகாப்பும், குழந்தைகளுடைய பாதுகாப்பும், தமிழ்நாட்டில்தான் பாதுகாப்பு சிறப்பாக இருக்கின்றது என்று உங்களுடைய ஒன்றிய அரசு தந்திருக்கக்கூடிய குறிப்பே தெளிவாகத் தந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பாரதிய ஜனதா கட்சி ஆளுகிற மாநிலங்களில்தான் இன்றைக்கு கலவரங்களும், பெண்களுக்குப் பாதுகாப்பில்லாத சூழநிலையும் இருக்கிறது என்பதையும் ஆதாரங்களோடு நான் விளக்குவதற்குத் தயாராக இருக்கிறேன். அதனை ஏற்றுக் கொள்ள உறுப்பினர் தயாராக இருக்கிறாரா?

நீங்கள் (நயினார் நாகேந்திரன்) பேட்டி கொடுத்ததை நானும் பார்த்தேன். இதுசம்பந்தமாகச் சொல்லும் போது 'மோடி மஸ்தான்'மாதிரி வேலை இருக்கிறதே என்று நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். (சிரிப்பு) அவர் பிரதமரையா சொன்னார் என்ற சந்தேகத்தில் நான் சொல்லிவிட்டேன். (சிரிப்பு) நீங்கள் 'மோடி மஸ்தான்' என்று சொல்லியிருப்பது TVயில் ஒளி பரப்பாகியிருக்கிறது. தவறி சொல்லியிருக்கலாம். ஆனால், 'மோடி மஸ்தான்' வேலையைச் செய்துவிட்டார்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். (சிரிப்பு)

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஒவ்வொருவருக்கும் 15 இலட்ச ரூபாய் அவரவர்களுடைய வங்கிக் கணக்கில் வரவு வைப்போம் என்று சொன்னீர்கள். (சிரிப்பு) அது என்ன ஆயிற்று? அதைச் சொல்லிவிட்டு இதையெல்லாம் சொல்லுங்கள். நன்றாக இருக்கும். (சிரிப்பு) (குறுக்கீடு)

**நயினார் நாகேந்திரன் :** நீட் தேர்வு வருவதற்கு முன்னால், மொத்தமாக ஆண்டொன்றுக்கு வெறும் 43 கிராமப்புற மாணவர்களுக்கு மருத்துவப் படிப்பில் இடம் கிடைத்தது. ஆனால், தற்போது அந்த 7.5 சதவிகித ஒதுக்கீடு கொடுத்ததற்குப் பிறகு, அன்றைக்கு மத்தியில் சுகாதாரத் துறை அமைச்சராக இருந்த பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்த ஜெ.பி.நட்டா அவர்களிடம் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த EPS அவர்கள் பேசி, 7.5 சதவிகித ஒதுக்கீடு கொடுத்ததன் அடிப்படையில், இன்றைக்கு ஆண்டொன்றுக்கு 543 மாணவர்கள் சேர்கின்றனர். (மேசையைத் தட்டும் ஒலி)

**அமைச்சர் தங்கம் தென்னரசு :** நான் ஒரே ஒரு கேள்வியைக் கேட்கிறேன். உறுப்பினர், BJP தலைவர், 7.5 சதவிகிதத்தைக் கொண்டு வந்தவர் திரு. நட்டா, BJPயினுடைய தலைவர் அவர்கள் என்று இங்கே சொல்கிறார்கள். அதை இப்போது புதிதாக கூட்டணியில் சேர்ந்திருக்கக்கூடிய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் அதை ஏற்றுக்கொள்கிறதா, இல்லையா என்பதை நான் இங்கே கேட்க விரும்புகிறேன்.

**நயினார் நாகேந்திரன் :** கடந்த 3 ஆண்டுகளில் மட்டும், பெண்களுக்கெதிரான குற்றங்கள் 50.71 சதவிகிதம் தமிழகத்தில் அதிகரித்துள்ளதாக தேசிய மகளிர் ஆணையம் ஒரு கருத்துக் கணிப்பு தெரிவித்திருக்கிறது.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :** மணிப்பூர் கணக்கையும் நீங்கள் சேர்த்து சொன்னால் சரியாக இருக்கும்.

**நயினார் நாகேந்திரன் :** ஆட்சிப் பொறுப்பேற்றதும் ஆயிரம் ரூபாய் தருவோம் என்று சொன்னார்கள். ஆனால், பாராளுமன்றத் தேர்தல் வந்தபிறகுதான் கொடுத்தார்கள். நான் கேட்பது என்னவென்றால், கொடுத்தது, சொல்லியது தவறு என்று சொல்லவில்லை. இப்பொழுது ஐந்தாயிரம் ரூபாய் சேர்த்து கொடுத்திருக்கிறார்கள். பாராளுமன்றத் தேர்தல் வரும் போது கொடுத்தால், அந்த 28 மாதமும் ஏன் அவர்கள் கொடுக்கவில்லை. அப்போது தேர்தலுக்கு கொடுத்ததாக அர்த்தமாகக்கொள்ளப்படும்,

**அமைச்சர் அர.சக்கரபாணி:** சென்ற ஆண்டுதான் கொடுக்கவில்லை. அதற்கு முந்தைய ஆண்டு கொடுத்தோம். ஆனால், அதே போன்று அஇஅதிமுக ஆட்சியில் இரண்டு ஆண்டுகள் பொங்கலுக்கு பணம் கொடுக்கவில்லை. அதே கூட்டணியில் இருப்பதால், அதையும் கேட்டு அவையிலே பேசுங்கள்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :** நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஒவ்வொருவருக்கும் 15 இலட்ச ரூபாய் அவரவர்களுடைய வங்கிக் கணக்கில் வரவு வைப்போம் என்று சொன்னீர்கள். (சிரிப்பு) அது என்ன ஆயிற்று? அதைச் சொல்லிவிட்டு இதையெல்லாம் சொல்லுங்கள். நன்றாக இருக்கும். (சிரிப்பு)

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.




## 7 சட்டமன்றத் தொகுதிகளில்

# 'தமிழ்நாடு தலைகுனியாது' பரப்புரை!

## கழக வெற்றிக்கு – மக்கள் திரள் ஆதரவு!








சென்னை, பிப்.21-

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தலை திறம்பட எதிர்கொண்டு வெற்றி வாகை சூடும் பொருட்டு , கழகத்தின் சார்பில் 234 தொகுதிகளிலும் தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரைக் கூட்டத்தை அறிவித்தார். 24 கழக நட்சத்திர பேச்சாளர்களுடன் பிப்ரவரி 1 ஆம் தேதி தொடங்கிய பரப்புரையானது 100 சட்டமன்ற தொகுதிகளைக் கடந்து வெற்றி பரப்புரையாக தொடர்ந்து வருகிறது.

திராவிடமாடல் அரசின் சரித்திர சாதனைகளை மக்களிடம் விளக்கியும், ஒன்றிய பா.ஜ.க. அரசு மற்றும் அதன் அடிமைக் கூட்டணி தமிழ்நாட்டு மக்களுக்குச் செய்து வரும் வஞ்சகத்தை மக்கள் முன்பு எடுத்துரைத்தும் கழகத்தின் சார்பில் தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரையானது நடைபெற்று வருகிறது.

(18.02.2026) அன்று பரப்புரைக் கூட்டமானது 7 சட்டமன்ற தொகுதிகளில் மிகுந்த எழுச்சியோடு நடைபெற்றது.

அண்ணாநகர் தொகுதியில் திருமதி.கனிமொழி சோமு அவர்கள் செய்யூர் தொகுதியில் கடலூர் புகழேந்தி அவர்கள், பெருந்துறை தொகுதியில் கார்த்திகேய சிவ சேனாபதி அவர்கள், கோபிசெட்டிபாளையம் தொகுதியில் தயாநிதி மாறன் அவர்கள் சிதம்பரம் தொகுதியில்திண்டுக்கல் ஐ. லியோனி அவர்கள். வேதாரண்யம் தொகுதியில் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் அவர்கள்,

ஈரோடு கிழக்கு தொகுதியில் கம்பம் செல்வேந்திரன் அவர்கள் சிறப்பு பேச்சாளர்களாக கலந்து கொண்டு அனல் பறக்க பரப்புரை மேற்கொண்டனர்.

ஒன்றிய பாஜக அரசும் அதன் அடிமை அதிமுகவும் தேர்தலை காரணம் காட்டி மக்களுக்கான நலத்திட்டங்களை முடக்க முயன்றதைத் தடுக்கும் விதமாக மூன்று மாத மகளிர் உரிமை தொகை 3000 உடன் 2000 ரூபாய் சிறப்பு நிதி என 5000 ரூபாயை முன் கூட்டியே அள்ளி வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு முழுக்க அசைக்க முடியாத ஆதரவு அலை உருவாகி உள்ளதை அலைகடலாய் திரண்ட மக்கள் வெள்ளம் சாட்சி கூறியது.

நலத்திட்டங்களை நிறுத்த முயலும் டெல்லி டப்பா எஞ்சின் கூட்டணியா இல்லை நலத்திட்டங்களை வழங்கி வளர்ச்சியை மீட்டெடுத்த முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களின் தமிழ்நாடு அணியா.? என பேச்சாளர்கள் கேட்க ஸ்டாலின்...ஸ்டாலின் என கூட்டம் ஆரவாரம் செய்தது